## கோவையில் செம்மொழிப் பூங்கா – தமிழ்த்தாய் சிலை! எல்லைக்காவலர்கள் –

# அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கான உதவித் தொகை உயர்வு!

## சட்டப்பேரவையில் – தமிழ் வளர்ச்சி – செய்தித் துறை – எழுது பொருள் – அச்சுத் துறைக்கான அறிவிப்புகள்! அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்!

**சென்னை, ஏப். 18-**
**சட்டப்பேரவையில் செய்தி மற்றும் விளம்பரம், எழுது பொருள் மற்றும் அச்சு தமிழ் வளர்ச்சித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்த அறிவிப்புகள் வருமாறு;-**

**தமிழ் வளர்ச்சித் துறை!**

1. **கோவையில் உள்ள செம்மொழிப் பூங்காவில் தமிழ்த்தாய் திருவுருவச் சிலை நிறுவப்படும் என்பதை இன்றைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

முதலமைச்சர் அவர்களின் சீரார்ந்த தலைமையில் கடந்த நான்காண்டுகளில் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாகப் பல்வேறு எழுச்சிவாய்ந்த திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களால் 25 ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட 133 அடி உயர அய்யன் திருவள்ளுவர் சிலையின் வெள்ளிவிழா மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த டிசம்பர் மாதம் பார்போற்றும் வகையில் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது.

தாய்மொழி, தாய்நாடு என்று பெருமிதமாகச் சொல்லும்வண்ணம் முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் தலைமையில் 2010 ஆம் ஆண்டு கோவையில் செம்மொழி மாநாடு நடைபெற்றது. அந்த மாபெரும் விழாவினை எந்நாளும் நினைவில் கொள்ளும்வகையில் தமிழன்னைக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் முகமாகவும் கோவை செம்மொழிப் பூங்காவில் தமிழ்த் தாய் சிலை நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2. **தமிழறிஞர்கள், எல்லைக் காவலர்கள், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு தற்போது திங்கள்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்மொழியின் மீதும் தமிழ்நாட்டின் மீதும் பற்றுக்கொண்டு ஆற்றிய அளப்பரிய பங்களிப்பினைப் போற்றும் விதமாக தற்போது திங்கள்தோறும் வழங்கப்படும்

உதவித் தொகையினை தமிழறிஞர்களுக்கு ரூ.4,500லிருந்து ரூ.7,500ஆகவும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு ரூ.3,500லிருந்து ரூ.7,500ஆகவும், எல்லைக் காவலர்களுக்கு ரூ.5,500லிருந்து ரூ.7,500ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதற்கென தொடர் செலவினமாக ஆண்டுதோறும் ரூபாய் 3 கோடியே 90 இலட்சத்து 60 ஆயிரம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும்.

### தவத்திரு குன்றக்குடி அடிகளார் - இசை முரசு நாகூர் அனிபா நூற்றாண்டு விழா!

3. **அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் வாயிலாக பயனாளிகளின் எண்ணிக்கை 100லிருந்து 150ஆக உயர்த்தப்படும்.**

தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் தொண்டாற்றும் அகவை (மணியடிக்கப்பெற்றது)

அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு தற்பொழுது, ஆண்டுதோறும் 100 தமிழறிஞர்கள் தேர்வு செய்யப்பட்டு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 150ஆக உயர்த்தப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கென ஆண்டுதோறும் தொடர்செலவினமாக ரூபாய் 48 இலட்சம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

4. **தமிழ் வளர்ச்சிக் கழகம் தொய்வின்றி செயற்பட வைப்புத் தொகை வழங்கப்படும்.**

தமிழ் வளர்ச்சிக் கழகம் 1946 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு தமிழ் மொழியில் கலைக்களஞ்சியம் தயாரித்து வெளியிடல், ஆண்டுதோறும் தமிழ் விழா நடத்துதல், தமிழில் வெளியாகும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்கி எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது.

செயற்கை நுண்ணறிவுக் காலத்திற்கேற்ப தமிழ் மொழியை வளர்த்தெடுக்கத் தேவைப்படும் தமிழ்த் தரவாக உருவாக்கம், சிறப்புக் கலைக் களஞ்சியங்கள் போன்ற திட்டப் பணிகளைத் தமிழ் வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளவும், தொடர்ந்து தொய்வின்றிச் செயல்பட உதவும் வகையில் வைப்புத் தொகையாக ரூபாய் 2 கோடி வழங்கப்படும்.

5. **தமிழறிஞர்களின் பதின்மரின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்படும்.**

தமிழ்நாடு அரசால் இதுவரை 189 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்பட்டு அவரது மரபுரிமையாளருக்கு ரூபாய் 15 கோடியே 32 இலட்சம் ரூபாய் நூலுரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. அவ்வரிசையில், 10 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை செய்யப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 1 கோடியே 1 இலட்சத்து 50 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

6. **சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம், துண்டலத்தில் அமைந்துள்ள திரு.வி.க. நூலகம் புதுப்பிக்கப்படும்.**

'இனி எங்கும் எவரும் தமிழிலேயே பேச வேண்டும்' என்று முழங்கியவரும் தாய்த்தமிழைக் காக்க அரும்பாடுபட்டவருமான தமிழ்த்தென்றல் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்களைப் போற்றும் வகையில் அவர் பிறந்த இடமான துள்ளம் என்கின்ற துண்டலம் கிராமத்தில் ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் நினைவரங்கமும், மார்பளவு வெண்கலச் சிலையும் நிறுவி, அங்குள்ள நூலகமும் மேம்படுத்தப்படும்.

7. **புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழக பன்னோக்குக் கலையரங்கு அருகில் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்படும்.**

புதுதில்லியில் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் பன்னோக்கு கலையரங்கத்தின் அருகில் உலகப் பொதுமறை தந்த அய்யன் திருவள்ளுவரின் சிலை நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

8. **மொழிபெயர்ப்பாளர் திரு.க.ரா.ஜமதக்னி அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் நினைவுத் தூண் அமைக்கப்படும்.**

இந்திய விடுதலைப் போராட்ட வீரர், மார்க்சிய சிந்தனையாளர், நூலாசிரியர், கவிஞர், பன்மொழிப் புலவர், மொழிபெயர்ப்பாளர் எனப் பல பரிமாணங்கள் கொண்ட திரு.க.ரா.ஜமதக்னி அவர்களுக்கு இராணிப்பேட்டை மாவட்டத்தில் நினைவுத்தூண் நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

9. **சங்க காலப் புலவர் குறமகள் இளவெயினிக்கு மதுரையில் திருவுருவச் சிலை நிறுவப்படும்**

புறநானூற்றுப் பாடலை இயற்றிய நல்லிசைப் புலமை மெல்லியலார் குறமகள் இளவெயினிக்கு மதுரையில் திருவுருவச் சிலை நிறுவப்படும். இதற்கென தொடராச் செலவினமாக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

10. **கவிக்கோ அப்துல் ரகுமான் பிறந்த நாளான நவம்பர் 9 ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.**

கவிக்கோ என்னும் அடைமொழியால் தமிழகத்திலும், தமிழறிந்த அயலகங்களிலும் அறியப்படுபவர் அப்துல் ரகுமான் அவர்கள். 1999 ஆம் ஆண்டுக்கான தமிழ்க் கவிதைக்குரிய சாகித்திய அகாதெமி விருது, 1989ல் தமிழ்ப் பல்கலைக்கழகம் வழங்கிய தமிழன்னை விருது, தமிழ்நாடு அரசு வழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றவர். பால்வீதி என்ற கவிதைப் படைப்பின்மூலம் தம்மை ஒரு புதுமைப் படைப்பாளியாக உலகிற்கு அறிவித்த கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 9 ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

11. **அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்த நாளான ஜூன் 15 ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.**

தமிழ்மீது அளப்பறிய பற்றுக்கொண்டிருந்த மணவை முஸ்தபா அவர்கள் நவீன அறிவியல் போன்ற துறைகளிலும் தமிழ் தடம் பதிக்க வேண்டும் என்ற அக்கறையோடு செயல்பட்ட அரிய ஆளுமை ஆவார். பிரிட்டானிக்கா கலைக் களஞ்சியத்தை தமிழில் கொண்டு வருவதற்கான குழுவைத் தலைமையேற்று வழி நடத்தியவர். அறிவியல் தமிழ் கருத்தரங்கை முதன்முதலில் நடத்தியவர். அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவம், கணினி ஆகிய துறை சார்ந்த கலைச்சொல் அகராதிகளை வெளியிட்டு அறிவியல் தமிழ் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து பணியாற்றிய அறிவியல் தமிழறிஞர் மணவை முஸ்தபா அவர்களின் பிறந்த நாளான ஜூன் 15 ஆம் நாளினை தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

12. **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'அறிஞர்களின் அவையம்' என்ற பெயரில் துறை சார்ந்த வல்லுநர்களின் கலந்தாய்வுக் கூட்டம் திங்கள்தோறும் நடத்தப்படும்.**

தமிழ் மொழி மற்றும் அதன் சிறப்புகளை அனைத்துத் துறைகளிலும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கேற்ப உலக அளவில் கொண்டு சேர்க்கும் வகையில் துறை சார்ந்த வல்லுநர்களின் கருத்துகளைப் பெற்று திட்டங்களாக நிறைவேற்ற, திங்கள்தோறும் கலந்தாய்வுக் கூட்டம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'அறிஞர்களின் அவையம்' எனும் திட்டத்தின் வழி நடத்தப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.



13. **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'தொல்காப்பியர் சுழலரங்கம்: மாநிலம் தழுவிய வெள்ளி வட்டம்' சிறப்புப்பொழிவு நடத்தப்படும்.**

தமிழ்மொழியின் இலக்கணம், இலக்கியம், விழுமியங்கள் ஆகியவற்றின் சிறப்பினை ஆய்ந்திடும் நோக்கில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வழியாக, தமிழ்ப் படைப்புகளை மேலும் விரிவுப்படுத்தும் வகையில் பல்கலைக்கழகங்கள்/கல்லூரிகளில் உள்ள தமிழ்த் துறை வாயிலாக, திங்கள்தோறும் தகைசால் தமிழறிஞர்கள்/ஆய்வாளர்களைக் கொண்டு 'தொல்காப்பியர் சுழலரங்கம்: மாநிலம் தழுவிய வெள்ளி வட்டம்' எனும் பொருண்மையில் சிறப்புப் பொழிவு நடத்தப்படும். இந்நிகழ்வானது இணைய வழியாக தமிழாய்வு மாணவர்களுக்கு கொண்டு சேர்க்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 20 இலட்சம் வழங்கப்படும்.

### கவிக்கோ அப்துல்ரகுமான் - மணவை முஸ்தபா பிறந்த நாளன்று மாவட்ட அளவில் அரசு விழா!

14. **உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையும் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு உணவு வழங்குவதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஐந்தாண்டு ஒருங்கிணைந்த தமிழ் முதுகலைப் பட்ட வகுப்பில் பயிலும் மாணவர்களில் தேர்வின் அடிப்படையில் 15 மாணவர்களுக்கு திங்கள்தோறும் கல்வி உதவித் தொகையாக ரூ.2,000/வீதம் வழங்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் தொடர் செலவினமாக ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். விடுதியில் தங்கிப்பயிலும் 45 மாணவர்களுக்கு 2025-2026 கல்வியாண்டு முதல் உணவு வழங்க ஏதுவாக ரூபாய் 12 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்.

**செய்தி மற்றும் விளம்பரத்துறை அறிவிப்புகள்**

1) **தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு விழா சிவகங்கை மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்**

சமயம், இலக்கியம் மட்டுமின்றித் தமிழ் இலக்கிய உலகில் பேச்சுத்திறன், எழுத்துத் திறன், இசைத்திறன் போன்ற பல துறைகளிலும் ஆழ்ந்த புலமை பெற்றவர், நூல் பல படைத்துள்ளவர், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனத்தின் தலைவராகத் திகழ்ந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு நிறைவுபெறுவதை தொடர்ந்து அவர்தம் தொண்டுகளைப் போற்றி அவரது நூற்றாண்டு விழா சிவகங்கை மாவட்ட அளவில் அரசு விழாவாக கொண்டாடப்படும்.

### எம்.ஜி.ஆர். திரைப்படம் - தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் திரைக் கருவூலம்!

2) **இசை முரசு நாகூர் இ.எம். அனிபா நூற்றாண்டு விழா நாகப்பட்டினம் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.**

தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வஃக்பு வாரியத் தலைவராகவும் தொண்டாற்றிய தமிழ் இசைப் பாடகர், திராவிட இயக்கக் கொள்கைகளை தனது தனித்துவமிக்க குரல் வளத்தால் இசைப் பாடல்களாக பாடியவர், "இசை முரசு" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் போற்றப்பட்டவர். இத்தகைய பல்வேறு பெருமைகள் கொண்ட இசை முரசு நாகூர் இ.எம். அனிபா நூற்றாண்டு நிறைவு பெறுவதையொட்டி அன்னாரின் நூற்றாண்டு விழா நாகப்பட்டினம் மாவட்ட அளவில் அரசு விழாவாகக் கொண்டாடப்படும்.

3) **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவாக விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பத்தில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அரங்கம் அமைக்கப்படும்**

பாரதிதாசன் (18911964) அவர்கள் தம் எழுச்சி மிக்க எழுத்துக்களால், "புரட்சிக் கவிஞர்" என்றும் "பாவேந்தர்" என்றும் அழைக்கப்பட்டார். அவர் "பிசிராந்தையார்" என்ற நாடக நூலுக்கு, 1969ல் சாகித்திய அகாடமியின் விருது பெற்றவர். அவரது இலக்கியப் பணிகளைப் போற்றிப் பெருமைப்படுத்தும் விதமாக விழுப்புரம் மாவட்டம் கோட்டக்குப்பத்தில் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அரங்கம் அமைக்கப்படும்.

4) **வேலூர் அண்ணா கலையரங்கம் குளிரூட்டப்பட்ட அதிநவீன அரங்கமாக புனரமைக்கப்படும்**

வேலூர் மாவட்டம், வேலூர் மாநகராட்சி அண்ணா சாலையில் அமைந்துள்ள அண்ணா கலையரங்கமானது, 1969 ஆம் ஆண்டு சிறுவர் அரங்கமாகச் செயல்பட்டு, 1971 ஆம் ஆண்டில் அண்ணா கலையரங்கமாகப் பெயர் மாற்றப்பட்டது. வேலூர் மாநகர மக்களின் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் நடைபெற்ற அரங்கமாகத் திகழ்ந்தது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட வேலூர் அண்ணா கலையரங்கத்தினைக் குளிர்சாதன வசதி, வாகன நிறுத்தம், புதிய கழிப்பறைகள், ஜெனரேட்டர் வசதி, நவீன எல்.இ.டி. (LED) மின் விளக்குகள், ஒலி அமைப்புகள் மற்றும் கண்காணிப்புக் கேமரா வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட அதிநவீன அரங்கமாக ரூபாய் 5 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

5) **குமரிக் கோமேதகம் ஆர். பொன்னப்ப நாடார் நூற்றாண்டினையொட்டி அன்னாருக்கு நாகர்கோவில் நகரில் திருவுருவச்சிலை நிறுவப்படும்.**

சுதந்திரப் போராட்டத் தியாகி கன்னியாகுமரியை தமிழ்நாட்டுடன் இணைப்பதற்கான போராட்டத்தில் மார்ஷல் நேசமணி அவர்களின் போர்ப்படைத் தளபதியாக விளங்கியவர், திருவிதாங்கூர் கொச்சி சட்டமன்றப் பேரவைக்கு இருமுறையும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மும்முறையும் தேர்தெடுக்கப்பட்டவர், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக விளங்கியவர். இத்தகைய பல்வேறு பெருமைகளைப் பெற்றிருந்தாலும் எளிமையாக வாழ்ந்து ஏழை மக்களின் குரலாய் ஒலித்து, மக்கள் நெஞ்சில் மறையாமல் வாழ்பவர். குமரிக் கோமேதகம் எனப் போற்றப்பட்ட பெருமைக்குரிய ஆர். பொன்னப்ப நாடார் நூற்றாண்டு நிறைவுபெறுவதையொட்டி, அவர் தொண்டுகளைப் போற்றி அவருக்கு நாகர்கோவில் நகரில் ரூபாய் 50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச்சிலை நிறுவப்படும்.

6) **தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் "முத்தமிழறிஞர் கலைஞர் திரைக் கருவூலம்" அமைக்கப்படும்**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவன வளாகத்தில் தென்னிந்தியத் திரைப்படங்களுக்கான ஓர் ஆவண மையமாகத் திரைப்படங்கள் குறித்த தகவல்கள் திரைப்படங்கள் சார்ந்த புகைப்படங்கள், கதைப் புத்தகங்கள், பாடல் புத்தகங்கள், கலை சார்ந்த விலைமதிப்பற்ற பழைமையான மற்றும் குறும்படங்களை எண்மியமாக்கி பாதுக்காத்திடும் வகையில் "முத்தமிழறிஞர் கலைஞர் திரைக் கருவூலம்" ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

7) **இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிறுவனம்** (Institute of Journalism and Media Studies) **சென்னையில் இக்கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்**

இதழியல் துறையில் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஊடகக் கல்வி மேம்பாட்டிற்கு ஒரு முதன்மையான கல்வி நிறுவனத்தை நிறுவி அதன்மூலம் ஆர்வம் மிகுந்த இளம் திறமையாளர்களை ஊக்குவிக்கவும், இதழியல் மற்றும் ஊடக ஆய்வியலில் தரமான கல்வியினை வழங்கிடும் வகையில், இதழியல் மற்றும் ஊடகவியல் கல்வி நிறுவனம் (Institute of Journalism and Media Studies) இக்கல்வியாண்டு முதல் தொடங்கப்படும்.

8) **மாநிலம் முழுவதும் உள்ள நினைவகங்களில் கண்காணிப்புக் கேமிராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு, மாவட்ட மற்றும் மாநில அளவில் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படும்**

செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் மாநிலம் முழுவதும் பராமரிக்கப் பட்டுவரும் அனைத்து நினைவகங்களிலும் கண்காணிப்புக் கேமிராக்கள் (CCTV) பொருத்தப்பட்டு அவற்றை மாவட்ட அளவில் மேற்பார்வையிடுவதற்கும் மாநில அளவில் கண்காணிப்பதற்கும், மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் ஒருங்கிணைந்த கட்டுப் பாட்டு மையங்கள் ரூபாய் 3.80 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

9) **சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்திலுள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகள் மண்டபம் மற்றும் தமிழ்மொழித் தியாகிகள் மண்டபங்கள் புனரமைக்கப்பட்டு அம்மண்ட பங்களிலுள்ள புகைப் படங்கள் எண்மியமாக்கப்படும்**

சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மண்டபம் மற்றும் தமிழ்மொழித் தியாகிகள் மண்டபங்களில் ரூபாய் 2.50 கோடி செலவில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு அம்மண்டபங்களிலுள்ள தியாகிகளின் புகைப்படங்கள் நவீன தொழில்நுட்பத்தில் எண்மியமாக்கப்படும்.

10) **அரசின் திட்டங்கள், சாதனைகள் பொதுமக்களுக்குச் சென்றடையும் வகையில் 10 மாவட்டங்களில் மின்சுவர்கள்** (Digital Wall) **அமைக்கப்பட்டுள்ள நிலையில், எஞ்சியுள்ள 28 மாவட்டங்களிலும் மின்சுவர்கள்** (Digital Wall) **அமைக்கப்படும்**

தமிழ்நாடு அரசின் அனைத்துத் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொது மக்கள் அனைவரும் அறிந்திடும் வகையில், முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் மின்சுவர்கள் அமைக்கப் பட்டுள்ள நிலையில், எஞ்சிய 28 மாவட்டங்களிலும் ரூபாய் 17.85 கோடி மதிப்பீட்டில் மின்சுவர்கள் (Digital Wall) அமைக்கப்படும்.

11) **தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தினை உலகத்தரத்திற்கு இணையாக உயர்த்திட முதற்கட்டமாக அதிநவீன கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.**

தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தினை உலகத்தரத்திற்கு இணையாக உயர்த்திடவும், அங்குப் பயிலும் மாணவர்களின் தரமான தொழில்நுட்பத் திறனை உயர்த்திடவும் கருதி, தமிழ்நாடு அரசு அமைத்த துணைக்குழுவின் பரிந்துரைகளின் பேரிலும், தரம் உயர்த்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட பாடத்திட்டங்க ளுக்கேற்ப, 6 பாடப் பிரிவுகளுக்கும் முதற்கட்டமாக ரூபாய் 10 கோடி மதிப்பீட்டில் அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

12) **அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் அமைந்துள்ள செய்தியாளர் அறைகளில் நவீன கட்டமைப்புடன் கூடிய கணினி மற்றும் அதிவேக இணையத்தள வசதிகள் ஏற்படுத்தப்படும்**

அச்சு மற்றும் காட்சி ஊடகச் செய்தியாளர்கள் உடனுக்குடன் செய்திகளை விரைந்து அனுப்பிட ஏதுவாக அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள செய்தியாளர் அறைகளில், நவீன கட்டமைப்புடன் கூடிய கணினி மற்றும் அதிவேக இணையத்தள வசதிகள், ரூபாய் 41 இலட்சம் (தொடரும் மற்றும் தொடரா செலவினம்) மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும்.

**எழுதுபொருள் மற்றும் அச்சு**

1) அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அச்சுத் துறையில் அதிநவீன அச்சு தொழில்நுட்பம் குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்து, அச்சுப் பணிகள் மேம்படுத்தப்படும்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையை சார்ந்த அனைத்து அரசு அச்சகங்களின் பணிபுரியும் தொழில்நுட்ப அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அச்சுத் துறையில் புதிய முன்னேற்றங்களை தெரிந்து கொள்வதற்கும், இத்துறையில் அச்சிடப்படும் பணிகளை உலக தரத்திற்கு இணையாக குறித்த காலத்தில் அச்சிட்டு, அரசு அச்சுப் பணித் தேவைகளை பூர்த்தி செய்திட அதிநவீன அச்சு தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளித்து திறன் மேம்படுத்தப்படும்.

2) அரசு மைய அச்சகம் மற்றும் கிளை அச்சகங்களில் அச்சு மற்றும் அனுப்புகைப் பணிகள் ERP for Printing Industry எனும் மென்பொருளை பயன்படுத்தி செம்மையாக்கப்படும்

எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் அனைத்து அச்சகங்களிலும் உள்ள பணிகளை திட்டமிட்டு/ஒருங்கிணைத்து கண்காணிக்கவும் பணிகளை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் செயலாக்கப்பட்டு அனுப்புகை செய்வதை உறுதி செய்து அரசு மைய மற்றும் கிளை அச்சகங்களில் அச்சு மற்றும் அனுப்புதல் பணிகளை செம்மையாக மேற்கொள்ள இந்த மென்பொருளானது பயன்படும். ERP for Printing Industry எனும் இம்மென்பொருள் தமிழ்நாடு மின்ஆளுமை முகமை (TNeGA) மூலம் வடிவமைக்கப்பட்டு, இதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

3) அரசிதழில் பெயர் திருத்தம்/பெயர் மாற்றம் வெளியிடுதல் உள்ளிட்ட சேவைகள் பொதுமக்களை எளிதில் சென்றடையும் வண்ணம் இணைய வழியில் மேற்கொள்ளப்படும்

பொது மக்களிடமிருந்து அரசிதழில் பெயர் திருத்தம், பெயர் மாற்றம் வெளியிடுதல் உள்ளிட்ட சேவைகளுக்கான விண்ணப்பங்கள், உரிய ஆவணங்கள், வெளியீட்டு கட்டணம் ஆகியவற்றுடன் இணைய வழியில் பெறப்பட்டு, இணைய வழியில் சரிபார்க்கப்பட்டு உரிய அலுவலரால் ஆணை பிறப்பிக்கப்பட்டு, முதன்முறையாக விரைவுத்துலங்கல் குறியீடு (QR Code) அங்கீகார வசதியுடன் அரசிதழில் வெளியிடப்படும். இதற்குரிய மென்பொருள் மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் உருவாக்கப்படும். இந்த சேவை 2025 ஜூலை மாதம் முதல் பொது மக்களின் பயன்பாட்டிற்கு வரும்.

4) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Double Wire Binding Machine (With Calendar Hanger Device) மற்றும் Hydraulic Punching Machine ஆகியவை கொள்முதல் செய்யப்படும்

சென்னை அரசு மைய அச்சகத்தில், நாட்காட்டிகள் (WireOBinding with Hanger) அச்சடிக்கும் பணி உள்ளிட்ட அச்சுப் பணிகளை விரைவில் மேற்கொள்ள ஏதுவாக Double Wire Binding Machine (With Calendar Hanger Device) மற்றும் Hydraulic Punching Machine ஆகியவை ரூ.19,92,430/ மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

5) சென்னை அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகம், மதுரை, திருச்சி, புதுக்கோட்டை மற்றும் விருத்தாசலம் அலகுகளுக்கு நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) 20 எண்ணிக்கைகள் கொள்முதல் செய்யப்படும்

அரசு மைய அச்சகம், அரசு கிளை அச்சகங்களில் காவல் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, பொதுப் பணித் துறை, அரசுத் தேர்வுகள் இயக்ககம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை யினர் நலத் துறை, பொதுத் (தேர்தல்கள்) துறை, பல்கலைக்கழக பணிகள், நிலைப்படுத்தப்பட்ட மற்றும் நிலைப்படுத்தப்படாத படிவங்கள் மற்றும் பதிவேடுகளை அச்சிடும் வெப் ஆப்செட் இயந்திரத்தில் காகித உருளைகளை பொருத்துவதற்கு 20 நியூமேடிக் தண்டுகள் (Pneumatic Shaft) ரூ.14,27,800/மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

6) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Orient 2 HITower1 வெப் ஆப்செட் இயந்திரத்திற்கு Sheeter Unit கொள்முதல் செய்யப்படும்

சென்னை அரசு மைய அச்சகத்தில் Orient 2 HITower1 இயந்திரத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் கூர்நோக்குடைய பணிகளான தேர்தல் வாக்குச்சீட்டு, பல்கலைக்கழக விடைத்தாள்களின் மேலட்டை மற்றும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் ePermit உள்ளிட்ட அச்சுப் பணிகளை சீராக அச்சிட ஏதுவாக Sheeter Unit ஒன்று ரூ.31,80,100/ மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

7) சென்னை அரசு மைய அச்சகத்திற்கு Variable Data Printer (VDP)க்கான Drop on Demand (DOD) Piezo Inkjet System CSPL 34 AE Print Head கொள்முதல் செய்யப்படும்

பல்கலைக்கழக தேர்விற்குரிய விடைத்தாள்களின் மேலட்டையில் உள்ள Bar Code, Numbering போன்றவற்றை அச்சிடும் பணி, படிவங்களில் எண்கள் அச்சிடும் பணி ஆகியவற்றை செம்மையாகவும், உரிய நேரத்திலும் முடிக்க ஏதுவாக Variable Data Printer (VDP)க்கான Drop on Demand (DOD) Piezo Inkjet System CSPL 34 AE Print Head ரூ.47,49,682/மதிப்பில் கொள்முதல் செய்யப்படும்.

இவ்வாறு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அறிவித்தார்.